

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அயப்பாக்கம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் 5.28 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் 7 MLT கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை புதுப்பிப்பு பணியை தமிழ்நாடு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத் துறை(பொ) அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ். முருகன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கணபதி, நேற்று முன்தினம் (17.06.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் செல்வி. அபூர்வா, வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், தலைமை பொறியாளர் கண்ணன், மேற்பார்வை பொறியாளர் ராமகிருஷ்ணன், செயற்பொறியாளர் திருமதி. வெங்கடேஸ்வரி உள்ளிட்ட துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி 75வது வார்டு தலைமை செயலக குடியிருப்பு ஏ.கே.சாமிநகர் 1வது தெருவில் அமைந்துள்ள பழைய விளையாட்டு திடலில் புதுபொலிவுடன் இறகு பந்து கூடம், வாலிபால் மற்றும் கபடி கிரவுண்ட் மற்றும் பெண்கள் உடற்பயிற்சிக் கூடம் அமைய உள்ள விளையாட்டு திடலின் புனரமைக்கும் பணியினை இந்து சமய அறநிலையத்துறை மற்றும் பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமம் அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார், ரமணி லோகேஷ் எம்.சி., டி.லோகேஷ், நா.துலுக்காணம், வீ.க.வெங்கடேசன், பி.சுகுமார், வனஜா சண்முகம், வீரமணி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### மோடி அரசின் அராஜக அநீதிகளை தட்டிக்கேட்பதில்

# கலைஞராகவே விஸ்வரூபம் எடுக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## பொன்குமார் அறிக்கை!

*சென்னை, ஜூன் 19-*

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதால் மோடி அரசின் அராஜக, அநீதிகளை தட்டிக் கேட்பதில் கலைஞராகவே விஸ்வரூபம் எடுக்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின் என விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி தலைவர் பொன்குமார் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

ஒன்றிய மோடி அரசின் அநீதிகளை, ஜனநாயக விரோத செயல்களை கண்டித்து: திமுகவினரை சீண்டாதீர்கள், சீண்டினால் தாங்க மாட்டீர்கள், எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும், இது மிரட்டல் அல்ல. எச்சரிக்கை என தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கர்ஜித்து இருப்பதன் மூலம் அவர் தலைவர் கலைஞராகவே உருவெடுத்து இருப்பதை பார்த்து இந்த நாடு பிரம்மித்து நிற்கிறது. உறவுக்கு கை கொடுப்போம். உரிமைக்கு குரல் கொடுப்போம் என்கிற உயர்ந்த தத்துவத்தை கூறி அதன்படி நின்றவர் தலைவர் கலைஞர். அராஜக செயல்கள் மூலம் தன்னையும், தனது கட்சியையும், ஆட்சியையும் மிரட்டி பார்க்க முயன்ற போதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்கள் அதனை எதிர்த்து விஸ்வரூபம் எடுத்தவர். ஆட்சியைப் பற்றி கவலைப் படாமல் மக்களுக்கு பணியாற்றக்கூடிய ஜனநாயகத்தை கட்டி காப்பதில் தலைவர் கலைஞர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்பட்டவர் என்பது நாடறியும். அதே வழியில் தான் இன்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும் அநீதிகளை எதிர்த்து நிற்பதில் அராஜகத்தை தடுப்பதில் ஆண் சிங்கமாக செயல்படுகிறார். காரணம் அவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆவார்.

ஒன்றிய மோடி அரசு அதிகாரத்திற்கு வந்த நாட்களில் இருந்து பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இல்லாத மாநிலங்களில் பிற கட்சி ஆட்சிகளை பணிய வைப்பதற்கு, அரசு நடுநிலை புலனாய்வு அமைப்புகளான சிபிஐ, அமலாக்கத் துறை, வருமானவரித்துறை போன்றவற்றை பயன்படுத்தி, சோதனைகள் நடத்துவது, வழக்கு பதிவு செய்வது, கைது செய்வது போன்ற ஜனநாயக விரோத செயல்களை அரசியல் சட்டத்தை அப்பட்டமாக மீறி செயல்பட்டு வருவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசையும் பணிய வைப்பதற்கு அதே பாணியில் மோடி அரசு முயற்சிக்கிறது.



அதனுடைய விளைவு தான் தலைமை செயலகத்தில் அமலாக்கத்துறை நடத்திய சோதனை. எந்த முன்னறிவிப்பும் இன்றி அமைச்சர் செந்தில்பாலாஜி கைது செய்யப்பட்டது. கைது செய்வதற்கு முன்பு அராஜகமாக அவரை துன்புறுத்தியது போன்றவையாகும். இப்படிப்பட்ட அராஜகங்களை பார்த்து முதலமைச்சர் பயந்து விடுவார் என கணக்கிட்டார்கள். ஆனால் அவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதால் இந்த அநியாயங்களை, அராஜகங்களை எதிர்த்து ஆணி அடித்தார் போல் இந்த செயல்களுக்கு எல்லாம் திமுக அஞ்சாது என்று பதிலடி கொடுத்தன் மூலம் அவர் கலைஞராகவே மாறியிருக்கிறார்.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைவதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் அமலாக்கத்துறை நடத்திய மொத்த சோதனைகளின் எண்ணிக்கை 112 என்றும், மோடி அரசு அமைந்த பின் எதிர்க்கட்சிகள் மீது நடத்தப்பட்ட சோதனை 3000 என்றும் ஒப்பிட்டு காட்டி மோடி அரசின் பழிவாங்கும் செயலை இந்த உலகிற்கு படம்பிடித்து காட்டியிருக்கிறார். இந்த குற்றச்சாட்டுகளில் கூட நிரூபிக்கப்பட்டது வெறும் 0.05% மட்டுமே என்பதையும் வெளிப்படுத்தி உள்ளார்.

ஜனநாயகத்தின் பெயரில் ஆட்சி செய்யும் மோடி அரசு அறிவிக்கப்படாத நெருக்கடி நிலையை நடைமுறைப்படுத்தி வருவதை சுட்டி காட்டியதன் மூலம் மோடி அரசின் முகத்திரை உலக அளவில் கிழிக்கப்பட்டிருக்கிறது. இப்படி அராஜகத்தை அநீதிகளை தட்டி கேட்பதில், தடுத்து நிறுத்துவதில் விஸ்வரூபம் எடுப்பதற்கு பெயர்தான் திராவிட மாடல். அந்த திராவிட மாடல் ஆட்சியை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கும் முதல்வர் தளபதிக்கு பின்னால் 8 கோடி தமிழர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். மோடி அமித்ஷா அண்ணாமலைகள் இதற்குப் பிறகாவது தங்களை திருத்திக் கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி எச்சரிக்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச ஸ்குவாஷ் போட்டி நிறைவு விழா!

## வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கோப்பைகள் - பரிசுத் தொகை வழங்கினார்!

**சென்னை, ஜூன் 19–**

**சென்னையில் நடைபெற்ற 2023 சர்வதேச ஸ்குவாஷ் போட்டியின் நிறைவு விழாவில் வெற்றி பெற்ற அணிகளின் வீரர், வீராங்கனைகளுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுத் தொகை –தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.6.2023) சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023 நிறைவு விழாவில், சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் முதல் இடம் வென்ற எகிப்து அணிக்கு தங்க கோப்பையும், இரண்டாம் இடம் வென்ற மலேசியா அணிக்கு வெள்ளி கோப்பையும், மூன்றாம் இடத்தை வென்ற இந்தியா மற்றும் ஜப்பான் அணிகளுக்கு வெண்கல கோப்பையும் வழங்கி வாழ்த்தினார்.

மேலும், சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 2023-ல் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல கோப்பைகளை வென்ற அணிகளின் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதக்கங்கள் அணிவித்து வாழ்த்தினார்.

**அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்புகள்!**

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை அனைவரும் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்தியது, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து நன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், சர்வதேச ஸ்குவாஷ் போட்டி - 2023 சிறப்பாக நடத்திடும் வகையில் தமிழ்நாடு அரசால் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் 12.06.2023 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டிகளை தொடங்கி வைத்தார். இச்சர்வதேச ஸ்குவாஷ் போட்டி 13.06.2023 முதல் 17.06.2023 வரை நடைபெற்றது. இந்தப் போட்டியில், இந்தியா, ஹாங்காங் - சீனா, ஜப்பான், மலேசியா, எகிப்து, தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் கொலம்பியா ஆகிய 8 நாடுகளைச் சேர்ந்த 32 தலைசிறந்த ஸ்குவாஷ் வீரர்கள் பங்கேற்றனர். இந்திய அணியில் ஜோஷ்னா சின்னப்பா, தன்வி கன்னா சவுரவ் கோசல் மற்றும் அபய் சிங் ஆகிய முன்னணி வீரர்கள் பங்கேற்றனர். இந்தப் போட்டியானது 12 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டில் நடத்தப்படுவது சிறப்புக்குரியது.

இந்தப் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்காக தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக 2 கோடி ரூபாய் நிதி தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2023 சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் முதல் இடம் வென்ற எகிப்து அணிக்கு சாம்பியன்ஷிப் தங்க கோப்பையும், பரிசுத் தொகையாக 10,000 அமெரிக்க டாலர்களும் (ரூ.8.20 இலட்சம்), இரண்டாம் இடத்தை வென்ற மலேசியா அணிக்கு வெள்ளி கோப்பையும், பரிசுத் தொகையாக 8,000 அமெரிக்க டாலர்களும் (ரூ.6.56 இலட்சம்), மூன்றாம் இடத்தை வென்ற இந்திய மற்றும் ஜப்பான் அணிகளுக்கு வெண்கல கோப்பைகளையும், பரிசுத் தொகையாக ஒவ்வொரு அணிக்கும் 6,000 அமெரிக்க டாலர்களும் (ரூ.4.92 இலட்சம்) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, வாழ்த்து தெரிவித்தார்.

இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, உலக ஸ்குவாஷ் கூட்டமைப்பு தலைவர் ஜீனா வூல்ட்ரிட்ஜ் (Zena Wooldridge), தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசன் மற்றும் சாம்பியன்ஷிப் கமிட்டி தலைவர் என். இராமச்சந்திரன், தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அசோசியேசன் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் 'கலைஞர் கோட்டம்' திறப்பு விழாவில்

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

*புதுக்கோட்டை, ஜூன் 19-*

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாளை (20.6.2023) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திருவாரூர் மாவட்டம், காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்



பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், ஒன்றிய பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள். மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தமது அறிக்கையில் கூறி உள்ளார்.



நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், அலங்காநத்தம் பிரிவில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 364 பயனாளிகளுக்கு ரூ. 8.53 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், ரூ.62.32 லட்சம் மதிப்பீட்டில் 3 புதிய திட்டப் பணிகளுக்கு நிர்வாக அனுமதியினையும் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், பயனாளிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சைதையில் நல உதவிகள் வழங்கல்!

*சென்னை, ஜூன் 19-*

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்குபகுதி, 142(அ) வட்ட திமுக சார்பில் மாவட்ட பிதநிதி வழக்கறிஞர் பொன்ஜெய்சிங் தலைமையிலும் சைதை மேற்குபகுதிகழக செயலாளரும், 10வது மண்டலக்குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்குபகுதி செயலாளரும், 13வது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினரும், 140வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலையிலும் 142வது (அ) வட்ட கழகச்செயலாளர் எஸ்.பி.கோதண்டம், 142வது வட்ட கழகச்செயலாளர் எம்.நாகா, இலக்கிய அணி இணைச்செயலாளர் ஏ.எஸ்.பழனி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் ஏ.சந்தோஷ், பொறியாளர் அணி பகுதி அமைப்பாளர் ஆர்.எஸ்.ரமேஷ், பகுதி பிரதிநிதிகள் பாரதிபாஸ்கர், வே.பிரபு, முன்னாள் பகுதி பிரதிநிதிகள் எம்.சுந்தர், ஜி.உதயா, முன்னாள் வட்ட செயற்குழு உறுப்பினர் கழக எஸ்.ரமேஷ் ஆகியோர் வரவேற்பிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் தொடக்க விழாவினை முன்னிட்டு 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சைதாப்பேட்டை, சுப்பிரமணிய சாலையில் 17.06.2023 (சனிக்கிழமை) மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயனாளிகள் 1500 பேருக்கு நல திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏழாஞ்சேரி கெ. வரதன்

### ஜூன் 19 (2003)



**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, திராவிடர் கழகத்திலும் பின்னர், கழகம் துவங்கிய பின், கிளைச் செயலாளர், செய்யாறு வட்டச் செயலாளர், வெம்பாக்கம் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1977–ல் காஞ்சிபுரத்தில் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெற்ற அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்" நாடகத்தில் நடித்தவர்.**

**ஊராட்சி மன்றத்தில் தலைவர், துணைத் தலைவர், கூட்டுறவு சங்கத் தலைவர், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் என பல்வேறு பதவிகள் வகித்தவர்.**

**பேரறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற 'இந்தி எதிர்ப்பு போராட்டத்தில்' காஞ்சிபுரம் அருகே உள்ள நத்தப்பேட்டையில் ரயில் மறியலில் ஈடுபட்டு ஆறுமாத கடுங்காவல் தண்டனையை கடலூர் சிறையில் அனுபவித்ததோடு, நெருக்கடி கால மிசாவில் கைது செய்யயப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டவர்.**

### தலைமைக் கழகம்

### தி.மு.க.